கொடுத்து இருப்பதாக கூறியுள்ளார்கள். அந்த ஏற்பாடானது அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும். எனவே இது சம்பந்தமாக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் கோவில்பட்டி வட்டம், கோவில்பட்டி - எட்டயாபுரம் சாலையில் அமைந்துள்ள குறிஞ்சாகுளம் கண்மாயை அரசு எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா எனவும், பல அரசு அலுவலகங்கள் கட்ட அரசு அனுமதி அளித்தும் இடம் இல்லாத காரணத்தால் அந்த அரசு அலுவலகங்கள் கட்டப்படாமல் உள்ளன; எனவே, மேற்படி கண்மாயை அரசு எடுத்துக்கொண்டு அங்கே பல அரசு அலுவலகங்களைக் கட்ட அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடத்திலே அது பற்றிய விவரமான குறிப்பு இருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலம் கொடுப்பது ஏரிகளை வெட்டுவதற்காகவும், குளங்களை வெட்டுவதற்காகவும்தான். குளங்கள் வெட்டுவதற்காக எங்கெங்கே நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சொல்லலாம். ஆனால் ஏரிகளையும் குளங்களையும் தூர்த்து கட்டிடம் கட்டுவது என்பது அரசினுடைய கொள்கைக்கு விரோதமானது. அதை அரசு பின்பற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 162, திரு. க. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

162—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணரை நியமித்தல்

***34238**—திரு. க. பழனிசாமி :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் தற்போது ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் பணியாற்றி வருகிறார்.

முற்பகல் 10.05

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகரத்திலே ஆப்பரேஷன் தியேட்டர், அதற்குண்டான கருவிகள், எக்ஸ்ரே எடுப்பதற்கான கருவிகள், தேவையான படுக்கை வசதிகளெல்லாம் இருந்தும்கூட, அங்கே நல்லமுறையிலே அறுவைச் சிகிச்சை செய்ய தேவையான டாக்டர் இல்லாத காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து நல்ல அறுவை சிகிச்சை டாக்டரை நியமிக்க முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான்கு மருத்துவ இடங்கள் இருக்கின்றன. இப்பொழுது அங்கே டாக்டர் லோகநாதன், எம். எஸ். என்ற ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் இருக்கிறார். இன்னொருவர் டி.ஜி.ஓ. படித்த ஒரு பெண் மருத்துவர் இருக்கிறார். அடுத்து டி. ஆர்த்தோ படித்த ஒரு மருத்துவர் இருக்கிறார். 4 மருத்துவர்கள் அங்கே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். நேற்றையதினமே இதைப்பற்றி நான் தெளிவாக விளக்கியிருக்கிறேன். ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலேயும் இருக்கிற மருத்துவர்கள் அத்தனைபேரும் என்ன ஸ்பெஷலிஸ்டாக இங்கே வேண்டுமென்று அரசாங்கம் வரையறை செய்திருக்கிறது. அதிலே குறிப்பாகத் தற்போது உடனடியாக மூன்று மருத்துவர்களை ஸ்பெஷலிஸ்டாக நியமிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது. எம்.எஸ்.-ஐப் பொறுத்தவரை, எங்கெங்கே ஆப்பரேஷன் தியேட்டர்கள் சிறந்த முறையிலே இருக்கிறதோ அங்கேயெல்லாம் ஒரு பொது அறுவை சிகிச்சை நிபுணர் நியமிக்கப்படுவார் என்பதையும், அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறுவை சிகிச்சை மருத்துவர் அங்கேயிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, அங்கே ஆப்பரேஷன் செய்வது கிடையாது. அங்கேயிருந்து 45 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்குச்

சென்றுதான் அறுவை சிகிச்சை செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்கே எல்லா வசதிகளும் இருந்தும்கூட, அறுவை சிகிச்சை செய்யாத காரணத்தினாலே அமைச்சரவர்கள் அதிலே கவனம் செலுத்தி, அங்கேயே ஆப்பரேஷன் செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா ? அங்கே வருகின்ற டாக்டர்களெல்லாம் வெளியூரிலேயிருந்து வருகின்ற காரணத்தினாலே அங்கே தங்குவது கிடையாது. ஆகவே, அங்கேயே தங்கி சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனஸ்தடிஸ்ட் இல்லாமல் ஒருவேளை அறுவை சிகிச்சை செய்யாமல் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. பக்கத்திலே யாராவது அனஸ்தடிஸ்ட் இருந்தால் அவர்களை மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். மருத்துவர்கள் அங்கே தங்காமல் இருந்தால் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். காரணம், அது ஒரு பெரிய அளவிலே இருக்கின்ற ஊர். நகராட்சியாக இருக்கிறது. வீடு கிடைப்பதிலே எந்தப் பிரச்சினையும் இருக்காது. எனவே, அங்கே மருத்துவர்கள் தங்காமல் வெளியூரிலேயிருந்து வந்தால் நிச்சயமாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 163, திரு. மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை. திரு. கே. ஏ. மனோகரன்......

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, நான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பக்கத்து ஊர்க்காரர் இருக்கிறார். அவர் கேட்பார். திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

163—

உரிகம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**35761*—திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், உரிகம் ஊராட்சிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?